**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | DVC.01/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | எ.ம.சா.1 |
| Name | : | திரு.சுப்ரமணி |
| Father's Name/Husband Name: | | திரு.ரத்தினம் |
| Village | : | வி. களத்தூர் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 62 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2025

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(மனுதாரர் ஆஜர். 1 ம் எதிர்மனுதாரர் ஆஜர். 2 ம் எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை)**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

அசல் வழக்கு எண் 01/2012 என்னிடம் காட்டப்படும் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் **" நான் பல ஆண்டு காலமாக வெளிநாடுகளில் வேலை செய்து வருகிறேன். தற்போதும் நான் வெளிநாட்டில் தான் வேலை செய்து வருகிறேன். நான் எனது திருமணத்திற்கு முன்பே வெளிநாடு சென்று விட்டேன்" என்று உள்ளது அது நான் அப்போ கூறியது தான். அந்த நிருபண வாக்குமூலத்தை ம.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் வழக்கு எண் 01/2012 என்னிடம் காட்டப்படும் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் **" என் பூர்வீக பாக சொத்துக்களை தற்பொழுது என் வெளிநாட்டு வருமானத்தின் மூலம் திருத்தி போர்வெல் போட்டு என் பெயரில் மோட்டார் சர்வீஸ் மின் இணைப்பு பெற்று இருக்கிறேன்"** என்று உள்ளது நான் கூறியதா என்றால் நான் போர் போடவில்லை. போர் போடவில்லை என்பதால் என்னுடைய பழைய வாக்குமூலத்திற்கு முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1986 முதல் 2001 வரை நான்

வெளிநாட்டில் சென்று தொழில் செய்து சம்பாதித்தற்கு ஆதாரமாக தாவா எண் 1/2012 கடவு சீட்டு 4 எண்ணிக்கை நான் தாக்கல் செய்தேனா என்றால் அந்த நேரத்தில் பண்ணியிருந்தேன். அப்போது அந்த வழக்கில் "**33 வருடமாக துபாயில் வேலை செய்து ரூபாய் 50 லட்சம் சம்பாதித்தற்கான ஆதாரம் இருக்கிறது" என்று தா.வா.எண் 1/2012 குறுக்கு விசாரணையில் கூறியுள்ளதா என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. 33 வருடமாக துபாயில் வேலை செய்து ரூபாய் 50 லட்சம் சம்பாதித்தற்கான ஆதாரம் இருக்கிறது" என்று தா.வா.எண் 1/2012 குறுக்கு விசாரணையில் கூறியுள்ள பகுதி ம.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அ.வ.எண் 01/2012 வழக்கு குறுக்கு விசாரணையில் நான் கூறிய வாக்குமூலத்தில் பூர்வீக சொத்துக்களுக்கு போர்வெல் பாசனம் தான் உள்ளது. அதில் கரும்பும் நெல்லும் பயிரிடுவோம் என்று நான் கூறியுள்ளது சரியா தவறா என்றால் சாட்சியிடம் பலமுறை கேட்டும் ஞாபகமில்லை என்று கூறினார். தா.வா.எண் 1/2012 குறுக்கு விசாரணையில் **" பூர்வீக சொத்துக்களுக்கு போர்வெல் பாசனம் தான் உள்ளது. அதில் கரும்பும் நெல்லும் பயிரிடுவோம்" என்று கூறியுள்ள பகுதி ம.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 21.07.1994 ம் ஆண்டில் பூர்வீக சொத்துக்களை கொடுத்த பாகப்பிரிவு பத்திரம் நான் என் சகோதர சகோதரிகள் பிரித்துக் கொண்டோம் என்றால் சரி எனக்கு ஒதுக்கப்பட்ட நிலம் எவ்வளவு என்றால் சாட்சி 1 ஏக்கர் 32 சென்ட் முதலில் கூறிவிட்டு பின்னிட்டு 1 ஏக்கர் 17 சென்ட் என்று கூறிவிட்டு பின்னிட்டு எனக்கு ஞாபகமில்லை என்று சொல்கிறார். பெரம்பலூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 59/2019 என்ற வழக்கு வீட்டினை பொருத்து எனக்கும் என் சகோதரி சந்திரா என் மகன் பாலமுருகன் மற்றும் அவருடைய மனைவி ஆகியோர்களுக்கிடையே நடைபெறுகிறது என்றால் சரிதான். நான் ஏற்கனவே வெளிநாடு சென்று அதிகமாக பணம் சம்பாதித்துள்ளேன் என்று கூறியுள்ள நிலையில் தற்பொழுது மனுதாரருக்கு சட்டப்படி நான் தரவேண்டிய ஜீவனாம்சத்தை ஏமாற்ற நான் கடந்த 10 வருடங்களாக வெளிநாட்டிற்கு செல்லவில்லை என்றும், சம்பாதிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முரண்பட்டு சாட்சியம் அளிப்பதால் முரண்தடை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு வீட்டில் அடைக்கலம் கொடுக்கவும், ஜீவனாம்சம் கொடுக்கவும் நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை அடித்துவிட்டு மனுதாரர் தான் வீட்டில் இருக்கிறார்கள்.

நான் மனுதாரருக்கு சட்டப்படி அளிக்க வேண்டிய ஜீவனாம்சம் மற்றும் அடைக்கலம் கொடுக்க வேண்டிய கடமையை ஏமாற்றுவதற்காக மனுதாரர் என்னை வீட்டை விட்டு துறத்திவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் வேண்டிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் நான் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.